கிராண்ட் மாஸ்டர் டி.குகேஷுக்குப் பாராட்டுகள்

# மேலும் பல உயர்நிலைகளை அடைய வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 7 -

சென்னையின் செஸ் வீரர் டி. குகேஷ் நார்வே போட்டியில் சாதனை படைத்து வருவதைப் பாராட்டியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேலும் பல உயர்நிலைகளை அடைந்து சென்னைக்கு பெருமை சேர்ப்பீர் என்று வாழ்த்தியுள்ளார்.

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நார்வேயில் நடைபெறும் செஸ் போட்டியில் கார்ல்சனுக்கு எதிரான போட்டியில் அசத்தலான, தீவிரமான, கடின போராட்டத்தின் மூலமாக, உங்கள் செஸ் பயணத்திலேயே மிக அதிகமாக 2739 தரப்புள்ளிகள் பெற்றுச் சாதனை படைத்துள்ள கிராண்ட் மாஸ்டர் டி.குகேஷ் அவர்களுக்குப் பாராட்டுகள்.**

**மேலும் பல உயர் நிலைகளை அடைந்து, இந்தியாவின் சதுரங்கத் தலைநகரான சென்னைக்குத் தொடர்ந்து பெருமை சேர்ப்பீர்கள் என நம்புகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

வில்லிவாக்கம் அகத்தீஸ்வரர் திருக்கோவில் சார்பில்

# இரண்டு மாற்றுத்திறனாளி இணையர்களுக்கு திருமணம்!

## இதுவரை 100 இணைகளுக்கு நடைபெற்றுள்ளன!

*சென்னை, ஜூன் 7 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுரையின் படியும் இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர்கள், திருக்குளங்களை புனரமைத்தல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.*

*2023 - 24-ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "திருக்கோயில்களில் திருமணம் செய்து கொள்கின்ற மாற்றுத்திறனாளிகளுக்கு 4 கிராம் பொன் தாலி வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கடந்த 27.04.2023 அன்று சென்னை, கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீ ஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் மாற்றுத்திறனாளி இணைகளுக்கு 4 கிராம் பொன் தாலியுடன் திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்களை வழங்கினார்.*

*அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (05.06.2023) சென்னை, வில்லிவாக்கம், அகத்தீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் 2 மாற்றுத்திறனாளி இணைகளுக்கு 4 கிராம் பொன் தாலியுடன் திருமணம் நடத்தி வைக்கப்பட்டு, சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதுவரை திருக்கோயில்கள் சார்பில் 100 மாற்றுத்திறனாளி இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.*

*இந்நிகழ்வில் சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகா தேவி, கொளத்தூர் காவல் துறை துணை ஆணையர் சி.சக்திவேல், காவல் துறை உதவி ஆணையர் இராகவேந்திரன் கே.ரவி, மாவட்ட அறங்காவலர் உறுப்பினர் திருமதி சாவித்திரி, இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் எம்.பாஸ்கரன், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு அறக்கட்டளையின் தலைவர் பி.சிம்ம சந்திரன், பாடி திருவல்லீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் வானவில் விஜய், மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி சுதா தீனதயாளன், திருக்கோயில் செயல் அலுவலர்கள் அ.குமரேசன், கே.பாரதிராஜா, ஆர்.கேசவராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*





பன்னூறு ஆண்டுகள்
வாழும் தமிழைத்
தன் நூறு ஆண்டுகளிலும்
தழைக்கச் செய்தவர்க்குப்
பல்லாண்டு!
முனைவர்.சுந்தர ஆவுடையப்பன்


பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை கொடுக்க ஆத்தூர் ரெட்டியார் சத்திரத்தில் உள்ள

# சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலகத்தை பயன்படுத்திக் கொள்வீர்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள்!



*சின்னாளபட்டி, ஜூன் 7 -*

*ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சிரமமின்றி கோரிக்கை மனுக்களை கொடுக்க ஆத்தூர் மற்றும் ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலகத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப் பொதுச்செய லாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி இல்லத்தில் நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை கொடுக்க ஆத்தூர் தொகுதிக்கு உட்பட்ட மலை கிராமமான ஆடலூர், பன்றிமலை மற்றும் மனலூர் மற்றும் மலையடிவார கிராமங்களி லிருந்து அதிக அளவில் வருகின்றனர்.*

*மேலும் கோரிக்கை மனுக்களைக் கொடுத்து செல்ல ஒருநாள் செலவிட வேண்டிய நிலைமை உள்ளது. பொதுமக்களின் சிரமங்களை உணர்ந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதிக்கு உட்பட்ட ரெட்டியார் சத்திரத்திலும், ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட செம்பட்டியிலும் சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலங்களை திறந்து ள்ளோம்.*

*ஒரு தாசில்தார் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் தலைமையில் பொது மக்களிடமிருந்துகோரிக்கை மனுக்களைப் பெற்று உடனடியாக கணினியில் பதிவு செய்து அன்று மாலையே என்னிடம் சேரும் வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முக்கியமான பிரச்சினைக் குரிய மனுக்களை மின் அஞ்சல் மூலம் அனுப்பி விடுகின்றனர். நானும் அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி உடனடியாக தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறேன்.*

*ஆத்தூர் தொகுதி பொது மக்களின் சிரமத்தை குறைக்கத்தான் முகாம் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றார்.திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தமிழக முதல்வர் - தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நல்லாட்சியில் கிராமப்புற வளர்ச்சிகளை கருத்தில் கொண்டு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து குறைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இம் மாதத்திற்குள் (ஜூன்) இரண்டு ஒன்றியங்களிலும் கூட்டங்கள் நடத்தி கிராமப்புற வளர்ச்சிக்கான நலத்திட்டங்கள் முழு வீச்சில் செயல்படுத்தப்படும் என்றார். ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்களாக பொறுப்பேற்றுக் கொண்ட கிருஷ்ணன், மலரவன் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருக்கு சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர்.*

*நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, பிள்ளை யார்நத்தம் முருகேசன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் விவேகானந்தன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் வாஞ்சிநாதன், கரிசல்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் பால்ராஜ், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் சுப்புலட்சுமி வள்ளுவதாஸ், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பண்ணைப்பட்டி அருண் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.*

புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## திருவுருவப் படத்திற்கு கே.கே.செல்லப்பாண்டியன் மலரஞ்சலி!

*புதுக்கோட்டை ஜூன் 7 -*

*முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அவர்களின் சிலைக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே. ஆர்.என்.போஸ், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப.சரவணன், சு.சண்முகம், நகர கழக செயலாளர் ஆ.செந்தில், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ். கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர் எம்.லியாகத் அலி, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, சி. ஆர்.வி.சித்ரா, இராசு.சந்தோஷ், மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ். சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், என்.சேட்டு, மு.பி.ம. சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், கே.பி.அய்யப்பன், குள வாய்ப்பட்டி சி. சண்முகம், எம்.எம்.பாலு, உரக்கடை கருப்பையா, அ.ரெத்தினம், முனைவர் டாக்டர் செ.குறிஞ்சிவாணன், முல்லை முபாரக், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, மு. கலைஞர் கருணாநிதி, மு. இளஞ்சேரன் முத்துச்சாமி, , அரங்கநாயகம், கி. சுப்பிரமணியன், டாக்டர் மு.க.முத்துக்க ருப்பன், கவிஞர் பெர்னாட்ஷா, ஆ.நாகராஜன், தாயினிப்பட்டி கண்ணன், செ.ரமேஷ், மு.ராஜதுரை, டான்சி ராஜேந்திரன், சதீஷ், டி.தயாளன், கவிஞர் ஆ. மரிய எட்வின், மா.மணிவேல், டி. அப்புக்காளை, பி.கே.வெங்கடேஷ், பழனிவேலு, செந்தாமரை பாலு, மெஸ் மூர்த்தி, முரளி, பிரேம் ஆனந்த், விஜயகுமார், ஜேம்ஸ், ஜாஹீர், தங்கராஜ். முத்துக்கருப்பன், கண்மணி சுப்பு, கே.எம். எஸ்.குமார், ராமச்சந்திரன், தியாகு, மெஸ் கார்த்தி, வாஹித் அலி, நவீன் அண்டனி, பிரசாந்த் மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

சென்னை நந்தம்பாக்கத்தில்

# வர்த்தக மைய விரிவாக்கப் பணிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆய்வு!

*சென்னை, ஜூன் 7 -*

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம் பாக்கத்தில் சென்னை வர்த்தக மைய விரிவாக்க ப்பணிகளை தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் நேற்று முன்தினம் (05.06.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை வர்த்தக மையத்தில் (*Chennai Trade Centre*) 10,560 சதுரமீட்டர் பரப்பளவில் மூன்று பொருட்காட்சி அரங்கங்களும், 2000 நபர்கள் அமரக் கூடிய மாநாட்டு அரங்கமும் தற்போது செயல்பாட்டில் இருந்து வருகிறது.

எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு, சென்னை வர்த்தக மையத்தின் விரிவாக்கத்திட்டதில் 83,745 சதுரமீட்டர் பரப்பளவில் ரூ.309 கோடி மதிப்பீட்டில் 4000 நபர்கள் அமரக்கூடிய மாநாட்டு அரங்கம் மற்றும் ஐந்து பொருட்காட்சி அரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றது. இங்கு 1308 கார்கள் நிறுத்தக்கூடிய வசதி கொண்ட,

பன்னடுக்கு வாகன நிறுத்தமும் (*Multi Level Car Parking*) கட்டபட்டு வருகின்றது. இந்த கட்டுமானப் பணிகளை அமைச்சர் டி. ஆர்.பி.ராஜா நேற்று முன்தினம் பார்வையிட்டார். இக்கட்டுமானப் பணிகளை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் முழுவதுமாக முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், டிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், தொழில் வழிகாட்டி மேலாண்மை இயக்குநர் / தலைமைச் செயல் அலுவலர் விஷ்ணு, செயல் இயக்குநர் டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி மற்றும் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# காஞ்சி மணிமொழியார்

**ஜூன் 7 (1972)**



**சென்னை மாநகரத்தில் கழகம் வளர்ந்திட தொய்வின்றி பணியாற்றியவர்.**

**1937–38ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்.**

**கழகத்தில் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டு சென்னை தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமதிப்புக்குப் பாத்திரமானவர்களில் முக்கியமானவர் இவர்.**

**"சின்ன உருவமும், சன்னமான குரலும், பொன்னான நெஞ்சும், மின்னும் விழிகளும் படைத்தவராய், துடிப்புமிகு நடையும், துவளாச் சுறுசுறுப்பும், தொண்டாற்றும் ஆர்வமும், தியாக மனப்பாங்கும் ஒருங்கே ஒருருவாய்த் திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களாலேயே புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!



**திட்டக்குடி தொகுதி**

| ஒன்றியம்/ நகரம்/ பேரூர் | தேதி | கழக பேச்சாளர்கள் |
|---|---|---|
| மங்களூர் தெற்கு ஒன்றியம் | 12.6.2023 | சைதை சாதிக் |
| மங்களூர் வடக்கு ஒன்றியம் | 11.6.2023 | குடியாத்தம் குமரன் |
| மங்களூர் கிழக்கு ஒன்றியம் | 12.6.2023 | சேலம் சுஜாதா |
| திட்டக்குடி நகரம் | 15.6.2023 | கரூர் முரளி |
| நல்லூர் தெற்கு ஒன்றியம் | 19.6.2023 | கந்திலி கரிகாலன் |
| பெண்ணாடம் பேரூர் | 28.6.2023 | ஆடுதுறை உத்திராபதி |
| **பண்ருட்டி தொகுதி** | | |
| அண்ணாகிராமம் ஒன்றியம் | 16.6.2023 | தூத்துக்குடி சரத் பாலா |
| மேல்பட்டாம்பாக்கம் பேரூர் | 15.3.2023 | ஒப்பில்லா மணி |
| பண்ருட்டி வடக்கு ஒன்றியம் | 17.6.2023 | போடி காமராஜ் |
| தொரப்பாடி பேரூர் | 18.6.2023 | ஆலந்தூர் மலர்மண்ணன் |
| பண்ருட்டி நகரம் | 14.6.2023 | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| நெல்லிக்குப்பம் நகரம் | 19.6.2023 | செங்கை தாமஸ் |
| **விருதாச்சலம் தொகுதி** | | |
| நல்லூர் வடக்கு ஒன்றியம் | 20.6.2023 | பவானி கண்ணன் |
| விருத்தாச்சலம் நகரம் | 20.6.2023 | கோவி செழியன் எம்.எல்.ஏ. |
| விருதாச்சலம் (வ) ஒன்றியம் | 22.6.2023 | ஆரணி மாலா |
| விருத்தாச்சலம் (தெ) ஒன்றியம் | 16.6.2023 | புதுக்கோட்டை விஜயா |
| மங்கலம் பேட்டை பேரூர் | 21.6.2023 | பொன்னேரி சிவா |
| கம்மாபுரம் (கி) ஒன்றியம் | 27.6.2023 | முரசொலி மூர்த்தி |
| கம்மாபுரம் (மே) ஒன்றியம் | 25.6.2023 | அல்தாப் |
| **நெய்வேலி தொகுதி** | | |
| பண்ருட்டி தெற்கு ஒன்றியம் | 25.6.2023 | எழும்பூர் கோபி |
| குறிஞ்சிப்பாடி (மே) ஒன்றியம் | 26.6.2023 | ஆரூர். மணிவண்ணன் |
| நெய்வேலி நகரம் | 11.6.2023 | சைதை சாதிக் |

**அமைச்சர் சி.வெ.கணேசன்**

செயலாளர், கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.